# NEWBEC

NEW WAY OF BEING CHURCH | பொதுக்காலம் ஆண்டின் 16 ஆம் ஞாயிறு | 19 ஜூலை 2026

**ஒன்றித்தப் பயணம் மற்றும் இறைவாக்கு உரைக்கும் திருஅவையை நோக்கி ஒன்றித்து நடத்தல்**

*மறைத்தூதுரைக்கும் சீடத்துவத்திற்கான மக்கள்*

மாதாந்திர நோக்கம்: சூழலியல் – நமது பொதுவான இல்லத்தைப் பராமரித்தல்

# நமது பொதுவான இல்லத்தில் நல்ல வீதைகளை வீதைத்தல்

இன்றைய வாசகங்கள், நம் இறைவன் அனைவரிடமும் அக்கறையும், பொறுமையும், நீதியும், இரக்கமும் உள்ளவர் என்பதை நமக்கு வலிமையாக நினைவூட்டுகின்றன. படைப்பின் அழகின் வழியாகவும், தமது வார்த்தையின் ஞானத்தின் வழியாகவும், நாம் ஒருவருக்கொருவர் மற்றும் நமது பொறுப்பில் ஒப்படைக்கப்பட்ட பூமியுடன் எவ்வாறு வாழ வேண்டும் என்பதை இறைவன் நமக்குக் கற்பிக்கிறார்.



முதல் வாசகத்தில், இறைவன் மனிதகுலத்தின் உரிமையாளராகவும் நண்பராகவும் வெளிப்படுத்தப்படுகிறார். அவருடைய வலிமையே நீதிக்கும் இரக்கத்திற்கும் ஊற்றாக இருக்கிறது. பாவிகள் மனந்திரும்பி அவரிடம் திரும்புவதற்கான வாய்ப்பை அவர் அளிக்கிறார். சுயநலம், சுரண்டல் மற்றும் அக்கறையின்மை ஆகியவற்றால் அடிக்கடி குறிக்கப்படும் இந்த உலகில், மற்றவர்களுடனும் படைப்புடனும் நாம் பழகும் விதத்தில் அவருடைய கனிவையும் மனிதநேயத்தையும் பின்பற்றுமாறு இறைவன் நம்மை அழைக்கிறார்.

இன்றைய நற்செய்தியில் உள்ள இயற்கை சார்ந்த உருவகங்கள் இந்தச் செய்தியை ஆழப்படுத்துகின்றன. விதைப்பவர் நல்ல கோதுமையை விதைக்கிறார், அதே சமயம் எதிரி அதற்கு இடையில் இரகசியமாகக் களைகளை விதைக்கிறான். வயல் இந்த உலகத்தையும், நல்ல விதைகள் கடவுளின் ஆட்சிக்குப்பட்ட மக்களையும், களைகள் தீமை மற்றும் பாவத்தின் சக்திகளையும் குறிக்கின்றன என்று இயேசு விளக்குகிறார். நம் குடும்பங்களிலும், சமூகங்களிலும், சமுதாயத்திலும், நாம் வாழ்வையும், அமைதியையும், நம்பிக்கையையும் கொண்டுவரும் நல்ல விதைகளை விதைப்பவர்களாக இருக்கிறோமா, அல்லது பிரிவினை, பேராசை, புறக்கணிப்பு மற்றும் தீங்கு விளைவிக்கும் செயல்கள் மூலம் களைகளை விதைக்கிறோமா?

நமது பொதுவான இல்லத்தின் மீதான அக்கறை மற்றும் படைப்பின் ஆன்மீகம் குறித்து நாம் சிந்திக்கும்போது, இந்தச் செய்தி குறிப்பாக அர்த்தமுள்ளதாகிறது. பூமியே நற்செய்தியில் உள்ள வயலைப் போன்றது. அதைப் பயிரிட்டுப் பாதுகாக்கும் பொறுப்பை இறைவன் மனிதகுலத்திடம் ஒப்படைத்துள்ளார். ஆயினும், பொறுப்பற்ற வாழ்க்கை, மாசுபாடு, காடழிப்பு மற்றும் வீண்விரயம் ஆகியவற்றின் மூலம், படைப்பில் பல களைகள் விதைக்கப்பட்டுள்ளன. ஏழைகளின் துன்பமும் சுற்றுச்சூழலின் அழிவும் மனிதனின் பாவம் மற்றும் சுயநலத்தின் விளைவுகளை வெளிப்படுத்துகின்றன. இருப்பினும், சேதமடைந்தவற்றை மாற்றுவதற்கும் மீட்டெடுப்பதற்கும் நமக்கு வாய்ப்புகளை அளித்து, இறைவன் பொறுமையுடன் காத்திருக்கிறார்.

நமது பலவீனங்களில் தூய ஆவியானவர் நமக்கு உதவுகிறார் என்று புனித பவுல் நமக்கு நினைவூட்டுகிறார். நன்மையும் தீமையும் உலகில் ஒன்றாகவே இருக்கின்றன என்ற உண்மையை நம்மால் மறுக்க முடியாது. நமது வாழ்வில் சவால்களாக, கோதுமையுடன் களைகளும் இருக்க இயேசு அனுமதித்தார். தேர்வு செய்வது உண்மையில் நாம் தான். தூய ஆவியின் வழிகாட்டுதலுடன், கடவுளின் வயலில் நல்ல விதைகளாக இருக்க நாம் தெரிவு செய்வோமாக அதாவது, உயிரைப் பேணி வளர்ப்பவர்களாகவும், படைப்பைப் பாதுகாப்பவர்களாகவும், இரக்கம் காட்டுபவர்களாகவும், நீதிக்காக உழைப்பவர்களாகவும் இருப்போமாக. நாம் ஒன்றாகப் பயணிக்கும்போது, கடவுளின் கொடைகளுக்கு உண்மையுள்ள பராமரிப்பாளர்களாக ஆவோமாக; அறுவடைக் காலத்தில், கடவுளின் ஆட்சிக்குட்பட்ட மக்களாக அதன் பலன்களை அனுபவிப்போமாக. திருப்பாடல் ஆசிரியருடன் இணைந்து, அவருடைய இரக்கத்திற்காக நாம் அவரைப் புகழ்வோம்.

**இன்றைய இறைவார்த்தை:**

சாலமோனின் ஞானநூல்: 12: 13, 16-19

திருப்பாடல் 85: 5-6, 9-10, 15-16

உரோமையர் 8: 26-27

மத்தேயு 13: 24-43 (அ) 13:24-30)

## இடமாற்றம் குறித்த அறிவிப்பு

உயர்மறைமாவட்ட மேய்ப்புப்பணி மையத்தில் (API) சீரமைப்புப் பணிகள் நடைபெறவிருப்பதால் எதிர்வரும் ஜூலை 15, 2026 முதல் மேய்ப்புப்பணி மையத்தில் (APC) அமைந்திருக்கும் அலுவலகம் கோலாலம்பூர் , ஜலான் பீல், திரு இருதய ஆண்டவரின் ஆலய வளாகத்திற்கு இடமாற்றம் செய்யப்படவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம். இந்த இடமாற்றம் மறுஅறிவிப்பு வரும்வரை நடைமுறையில் இருக்கும்.

கூடுதல் விவரங்களுக்கு:
தொலைபேசி எண்:
**016-366 9461**

INTERNAL CIRCULATION ONLY
BUL 29/2026

**வெளியீடு**: மாமறைமாவட்ட மேய்ப்புப்பணி நிலையம் (API) | **Email:** api@archkl.org